# ஆன்லைனில் பாதுகாப்பாக இருங்கள்

amazon future engineer



இரண்டு வாரங்களுக்கு முன் அடில்தனது பிறந்தநாளன்று தனது முதல்ஸ்மார்ட் ஃபோனைப் பெற்றார்... அதை அவர்மிகவும் விரும்புகிறார்! நீங்கள் அவரதுஆன்லைன் செயல்பாடுகளில் இணைந்து ஆன்லைன் பாதுகாப்பு மற்றும் தனியுரிமை பற்றிஅவர் அறிந்துகொள்ள உதவுவீர்களா?

அடில் சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ளராய்ப்பூரில் வசிக்கிறார். 8 ஆம் வகுப்பு படிக்கிறார். அவருக்கு 2024 இல் வயது 12! அவருக்குப் பிடித்த பாடம் இயற்பியல் - அது அனைவருக்கும் தெரியும்! அவர் கால்பந்து விளையாடுவதை விரும்புகிறார். ஆன்லைனில் ஷாப்பிங் செய்வது அவருக்குப் பிடிக்கும். தனது ஃபோனில் இவ்வளவு ஆர்வமாக இருக்கும் அவருக்கு அதைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதும் தெரியும். எனவே அவர்கடவுச்சொல்லை உருவாக்க முயற்சி செய்கிறார்.

கடவுச்சொற்கள் உங்கள்அனுமதியின்றி உங்கள்ஃபோனை யாரும்கையாள முடியாது என்பதை உறுதிசெய்கின்றன. உங்களுக்கு நெருக்கமாக இல்லாதஒருவர் உங்கள்படங்கள், செய்திகள், தொடர்புகள் மற்றும் உங்கள் அனைத்து ரகசியங்களையும் பார்க்க முடிந்தால் அது மோசமாக இருக்கும், இல்லையா?! அடிலின் கடவுச்சொற்களை உங்களால் யூகிக்க முடியுமா?



## அடிலின் கடவுச்சொற்களை நீங்கள் யூகிக்க முடியுமா?

_ _ _ _ _ _ _ _ — ஒருவேளை நான் நிச்சயமாக நினைவில் வைத்திருக்கும் ஒன்றை வைப்பேன்!

_ _ _ _ _ _ _ _ — எனக்குப் பிடித்த விளையாட்டு பயனுள்ளதாக இருக்கும்!

_ _ _ _ — நான் பிறந்த வருடம் யாருக்கும் தெரியாது

_ _ _ _ _ — நான் என் தொலைபேசியை சீக்கிரம் திறக்க வேண்டும்!



உங்கள் கடவுச்சொல் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளும் அளவுக்கு எளிதாக இருக்கவேண்டும். ஆனால் வேறு யாரும்எளிதில் யூகித்துவிட முடியாதபடி கடினமாக இருக்க வேண்டும்! அடிலின் கடவுச்சொல் அவரைப் பற்றியஅடிப்படைத் தகவல்களுடன் யூகிக்க மிகவும் எளிதானதாக இருந்தால் அது வலுவானகடவுச்சொல் இல்லைஎன்று பொருள்!

# உறுதியானனகடவுச் சொற்களைஉருவாக்குதல்




## உறுதியான கடவுச்சொல் பற்றிய வழிகாட்டுதல்கள்

**பெரிய எழுத்து மற்றும் சிறியஎழுத்துகள், எண்கள் மற்றும் சிறப்பு அடையாளக் கலவையைப் பயன்படுத்தவும்.**

| ✗ | ✓ |
|---|---|
| shirtsatninetyniners | $hirts@99Rs& |
| Forgot Password? | Forgot Password? |

**8-12 எழுத்துகளுக்கு இடைப்பட்ட நீளம் கொண்டதாக அமைக்கவும்.**

| ✗ | ✓ |
|---|---|
| foot$ | footballlover12 |
| Forgot Password? | Forgot Password? |

**·பொதுவானவையும் எளிதில் யூகிக்கக்கூடியவையுமான சொற்களைப் பயன்படுத்த வேண்டாம்.**

| ✗ | ✓ |
|---|---|
| adilraipur | h0lidaysandch0colat3 |
| Forgot Password? | Forgot Password? |

**·உங்கள் பிறந்தநாள் அல்லது செல்லப்பிராணியின் பெயர் போன்றவெளிப்படையாகத் தெரியும் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்த வேண்டாம்.**

| ✗ | ✓ |
|---|---|
| bruno2012 | dRjox76!$kL57 |
| Forgot Password? | Forgot Password? |





உங்கள் கணக்குஒன்றிற்கு உறுதியான கடவுச்சொல்லை உருவாக்க அதே வழிகாட்டுதல்களைப் பயன்படுத்த முடியுமா?

### உதவிக் குறிப்பு!

வெவ்வேறு கணக்குகள் அல்லது தளங்களுக்கு ஒரே கடவுச்சொல்லை ஒருபோதும் பயன்படுத்த வேண்டாம். அப்போதுதான் ஒருவரால் உங்கள்கணக்குகளில் ஒன்றைஅணுக முடிந்தாலும் மற்ற கணக்குகளில் உள்நுழைய முடியாது! கூடுதல் பாதுகாப்புக்காக 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது உங்கள்கடவுச்சொற்களை மாற்றவும்

# ஆன்லைன் தனியுரிமை

தனது அனைத்து கணக்குகளுக்கும் உறுதியான கடவுச்சொற்களை இப்போது அடில் அமைத்துவிட்டதால் பாதுகாப்பாக உணர்கிறார். ஆனால் அவரதுஒட்டுமொத்த ஆன்லைன் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிசெய்ய உறுதியான கடவுச்சொற்கள் மட்டும் போதுமானவையா? அவரது ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் பழக்கவழக்கங்களைப் பாருங்கள்: ஏதாவது வேறுபாடுகளை நீங்கள் கவனிக்கிறீர்களா? இணையத்தில் உலாவும்போது அவர்மனதில் கொள்ளவேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றனவா?

## அடிலின் ஆஃப்லைன் நடத்தைகள்



ஒருவரும் ஒட்டுக் கேட்காமல் இருப்பதை உறுதிசெய்ய அடிலும் நண்பர்களும் தனிப்பட்ட விஷயங்களை விவாதிக்க வீட்டுக்கு வரும்வரை காத்திருக்கிறார்கள்!



விளையாட்டு களத்தில் வைத்து யாராவது அடிலிடம் அவரது பள்ளியின் பெயர் அல்லது முகவரியைக் கேட்டால் அவர் பணிவுடன் கூற மறுக்கிறார்.



பள்ளிப் படிவங்களில் பெற்றோரின் வங்கி விவரங்கள் கேட்கப்பட்டிருந்தால் அது ஏன் தேவைப்படுகிறது என்பதை அவர் எப்போதும் சரிபார்ப்பார், மேலும் குறியீடுகள்/ கடவுச்சொற்களைப் பகிர்ந்து கொள்ள மாட்டார்.



கடிதங்கள் அல்லது பார்சல்களைத் திறப்பதற்கு முன் அனுப்புகிறவர் சட்டபூர்வமானவரா, பாதுகாப்பானவரா, அவருடைய முகவரி அவர்களுக்கு எப்படித் தெரியும் என்பதை அவர் உறுதிசெய்கிறார்.

## அடிலின் ஆன்லைன் நடத்தைகள்



யாரால் எல்லாம் பார்க்க முடியும் என்பதைச் சரிபார்க்காமல் அடில் தனிப்பட்ட விவரங்களைக் கருத்துக் களத்தில் விவாதிக்கிறார்.



அடில் தனது இடுகைகளில் தனது இருப்பிடத்தைப் பதிவுசெய்கிறார். மேலும் தனது இருப்பிடத்தை ஆன்லைனில் அடிக்கடி பகிர்ந்து கொள்கிறார்.



புதிய மற்றும் அறிமுகம் இல்லாத வலைத்தளங்களில் பதிவு செய்யும்போது அங்கு கேட்கப்படும் அனைத்து விவரங்களையும் அவர் பகிர்ந்து கொள்கிறார்.



அறிமுகம் இல்லாத இணைப்புகளை அவர் போனபோக்கில் கிளிக் செய்கிறார். இணைப்புகள் எப்போதும் தன்னை அதிக சுவையான செய்திகளைக் கொண்டஇடங்களுக்கு அழைத்துச் செல்லும் என்று நம்புகிறார்.

# ஆன்லைன் தனியுரிமை

உங்களைப் பற்றியதகவலை பிறர்அறிந்துகொள்வதைக் கட்டுப்படுத்துவதே தனியுரிமை ஆகும். வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு நிலையிலான தனியுரிமையை விரும்புகிறார்கள் - எடுத்துக்காட்டாக, சிலர் தங்கள் பிறந்தநாளைப் பகிர்ந்து கொள்ளவிரும்புவதில்லை, மற்றவர்கள் விரும்புகிறார்கள்! இருந்தாலும் இருப்பிடம் அல்லதுதனிப்பட்ட கதைகளைஆஃப்லைனில் யாருடனும் பகிர்ந்து கொள்ளாமல் கவனமாக இருப்பது போல ஆன்லைனில் உங்கள் தனியுரிமையைப் பராமரிப்பதும் பாதுகாப்பை அதிகரிப்பதும் உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும். தகவலைப் பாதுகாக்கக் கற்றுக்கொள்வதன் மூலம் அடில்தனது ஆஃப்லைன் பாதுகாப்பு மற்றும் தனியுரிமை நடத்தைகளை தனது ஆன்லைன் வாழ்க்கைக்கு ஏற்றதாக மாற்ற உதவுங்கள்

## ஆன்லைனில்கேட்கப்படும்தகவலின்வகை [2 3]



தனிப்பட்டது - அதாவது, அந்நியர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு நபரை அடையாளம் காண உதவும் தகவல் - உங்கள் பெயர் போன்றவை!

ஆன்லைனில் பகிர்வதைத் தவிர்க்கவும், குறிப்பாக அறியப்படாத/சரிபார்க்கப்படாத தளங்களில், ஏனெனில் அது உங்களுக்கு தீங்கு விளைவிக்கப் பயன்படுத்தப்படலாம்.



·முக்கியமானதனிநபர்குறித்தத்தகவல் - அதாவது, தனிப்பட்ட தகவல் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு கூடுதல் வாய்ப்புள்ளது, ஏனெனில் அவை உங்கள்கைரேகை போன்றபிற முக்கியமான விஷயங்களைக் கொண்டுள்ளன!

ஆன்லைனில் மற்றவர்களுடன் பகிர வேண்டாம்!*



·தனிப்பட்டதகவல்அல்லாதவை - அதாவது, ஒரு நபரைக்குறிப்பாக அடையாளம் காண பயன்படுத்த முடியாத தகவல் - பிடித்த நிறம்போன்றவை!

வசதியைப் பொறுத்து தனிப்பட்ட தகவல்இல்லாமல் பகிரலாம்.

*நெட்பேங்கிங், ஷாப்பிங் அல்லது அரசுபோர்டல்கள் போன்றஆன்லைன் சேவைகளுக்கு முக்கியமான தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தால், அதிகாரப்பூர்வ மற்றும் சோதிக்கப்பட்ட வலைத்தளங்களை மட்டுமே பயன்படுத்தவும்.

அடில் பற்றிய தகவல்பட்டியல் கீழேஉள்ளது. மனதிற்குள் ஒவ்வொன்றையும் சரியானபிரிவில் வைக்கவும்: தனிப்பட்ட, தனிப்பட்டவை அல்லாத மற்றும் மிகமுக்கியமான தனிப்பட்ட தகவல்!

·பெயர்

·கைரேகை

·பள்ளியின் பெயர்

·மதிப்புரைகள் மற்றும் கருத்து

·பொதுவான பொழுதுபோக்குகள்

·வயது

·கடவுச்சொல்

·வீட்டு முகவரி

·மின்னஞ்சல் முகவரி

·வங்கி விவரங்கள்



தனிப்பட்டது

தனிப்பட்டது அல்லாதது

உணர்திறன் வாய்ந்த தனிப்பட்டது

1. சான் ஜோஸ் பொது நூலகம். கருவித்தொகுப்பு: ஆன்லைன் தனியுரிமை என்றால் என்ன? www.sjpl.org/toolkit-what-online-privacy/
2. பாதுகாப்பு நுண்ணறிவு (IBM பாதுகாப்பு) (2023, ஜூலை). தனிப்பட்ட தரவு vs. உணர்திறன் தரவு: வித்தியாசம் என்ன. www.securityintelligence.com/posts/personal-data-vs-sensitive-data-what-is-the-difference/
3. ஆஷிஷ் ஆர்யன் (2020, ஜூலை). விளக்கம்: தனிப்பட்டது அல்லாத தரவு என்றால் என்ன? இந்தியன் எக்ஸ்பிரஸ்

# பாதுகாப்புக்கருவி த்தொகுதி!

amazon future engineer



வாழ்த்துக்கள்! ஆன்லைன் பாதுகாப்பு மற்றும் தனியுரிமையின் உத்திகளை கற்றுக்கொள்ள அடிலுக்கு உதவியிருக்கிறீர்கள். வெகுமதியாக, இதோ ஒரு கருவித் தொகுப்பு... இது உங்களையும் அடிலையும் ஆன்லைனில் கூடுதல் பாதுகாப்பாக வைத்திருக்கும் அனைத்து வகையான அருமையான கருவிகளையும் கொண்டுள்ளது! அவை என்னவென்று பார்க்க விரும்புகிறீர்களா?



**இரட்டைப்பாதுகாப்பு**

உங்கள் கணக்குகளில் கூடுதல் பாதுகாப்பை அமைக்க 2 காரணி அங்கீகாரத்தைப் பயன்படுத்தவும்! யாராவது உங்கள்கடவுச்சொல்லை யூகித்தாலும் உள்நுழைய அவர்களுக்கு இரண்டாவது குறியீடு தேவைப்படும் என்பதைஇது உறுதிசெய்கிறது. எந்தக் கணக்கிலும் உள்ளஅமைப்புகளுக்குச் சென்றுதனியுரிமை மற்றும் பாதுகாப்பு என்பதன் கீழ், அதைக் கண்டறியவும்



**தள சரிபார்ப்பு**

நீங்கள் பாதுகாப்பான நம்பகமான வலைத்தளத்தில் இருக்கிறீர்கள் என்பதைகவனமாக உறுதிப்படுத்த இந்த வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தவும்.

› உலாவியில் நீங்கள் தட்டச்சு செய்யும் வலைத்தளத்தின் இணைப்பைச் சரிபார்க்கவும், அது "https" உடன் தொடங்குவதை உறுதிசெய்யவும்

› இணைப்பின் பெயர் ".com" ".org" ".gov" அல்லது ".edu.in" உடன் முடிவடைவதை உறுதிசெய்யவும் - இவை நிலையான பெயர்கள்

› அதை யார்உருவாக்கினார்கள், எப்படி வடிவமைக்கப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள ஒட்டுமொத்த வலைத்தளத்தையும், குறிப்பாக அறிமுகம் பகுதியையும் சரிபார்க்கவும்.



**இணைப்புக்கவசம்**

தெரியாத அல்லதுசந்தேகத்திற்கிடமான இணைப்புகளில் இருந்து விலகிஇருக்க உதவும்சில வழிகாட்டுதல்கள் இதோ - அவற்றைக் கிளிக் செய்யாதீர்கள்! எதிர்பாராத ஆதாரத்தில் இருந்து ஓர் இணைப்பைப் பெற்றுஅது தவறாகத் தெரிந்தால், எழுத்துப் பிழைகளைக் கொண்டிருந்தால், அல்லது கவர்ச்சிகரமான செய்தியுடன் வந்தால், விலகி இருங்கள்... சில நேரங்களில், தெரியாத இணைப்புகள் உங்கள் தகவலைத் திருடலாம் அல்லதுதீங்கு விளைவிக்கும் வைரஸ்களை உங்கள்டிவைசில் பதிவிறக்கம் செய்யலாம்.



**தனியுரிமைத்தோழன**

உங்களுக்குத் தெரியுமா? பெரும்பாலான செய்திஅனுப்புதல், கேமிங் மற்றும் சமூகஊடக தளங்கள் உங்கள் சுயவிவரத்தை மற்றவர்களிடம் இருந்து மறைக்கவும், நீங்கள் இடுகையிடுவதை யார்பார்க்கலாம் என்பதைக் கட்டுப்படுத்தவும் உங்களைஅனுமதிக்கின்றன! உங்களுக்கு யார் செய்திஅனுப்ப அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதையும் நீங்கள் கட்டுப்படுத்தலாம். மேலும் உங்கள் கணக்குஅமைப்புகளின் தனியுரிமைப் பிரிவுகளின் கீழ்விருப்பங்களை கவனமாகத் தேர்ந்தெடுப்பதன் மூலம், நீங்கள் கூடுதல் பாதுகாப்பாக இருக்கமுடியும்!.

# பதில்களுக்கானதிறவுகோல்

## அடிலின் கடவுச்சொற்களை உங்களால் யூகிக்க முடியுமா?

கடவுச்சொல்

கால்பந்து

2012

12345



## ஆன்லைன்தனியுரிமை

| தனிப்பட்டவை | தனிப்பட்டவைஅல்லாதவை | தனிப்பட்டவைகளில் மிக முக்கியமானவை |
|---|---|---|
| பெயர் | மதிப்புரைகள் மற்றும் கருத்து | கடவுச்சொல் |
| வயது | பொதுவான பொழுதுபோக்குகள் | கைரேகை |
| பள்ளியின் பெயர் | | வங்கி விவரங்கள் |
| | | வீட்டு முகவரி |
| | | மின்னஞ்சல் முகவரி |




